# 4.மொனாக்கோ






**சு**வையான மொனாக்கோ உப்பு பிஸ்கட் சாப்பிட்டிருக்கிறோம். ஆனால் அந்தப் பெயரில் ஐரோப்பாவில் பிரான்சை ஒட்டி ஒரு குட்டி நாடு இருப்பது பலருக்குத் தெரியாது. ஆம் நம் மதுரை நகரில் 122 பகுதியில ஒன்று தான் இந்த நாடே. ( 2.02 சதுர கி.மீ ) அதாவது நகர நாடு. வத்திக்கானுக்கு அடுத்து உலகில் சிறிய நாடு இதுவே. ஆனால் கையளவுள்ள இந்தத் தேசத்தில் 35,986 மக்கள் வாழ்கின்றனர் என்பதால், உலகிலேயே மக்கள் அடர்த்தி மிகுந்த நாடு மொனாக்கோதான். நற்பேறாக சில ஆண்டுகளுக்கு முன் கடல் உள்வாங்கி மொனாக்கோ இலவசமாக 100 பரப்பளவு நிலத்தைப் பெற்றது. கிழக்குத்திசையில் மத்திய தரைக்கடலும், மற்ற 3 திசைகளில் பிரான்சும் இதன் எல்லைகள்.



*மொனாக்கோ- நகர நாடு*

1861 இல் இதுபோல இருமடங்காக இருந்த இந்த தேசம் பொருளாதார பிரச்சினையால், நிதி நெருக்கடி ஏற்பட்டு, பாதி தேசத்தைப் பிரான்சுக்கு விற்கவேண்டியதாயிற்று. இந்த இழப்பைச் சரிக்கட்ட 1850 வாக்கில் மாண்டே கார்லோ

என்ற பகுதியில் சூதாட்ட விடுதிகளை உருவாக்கினார் அன்றைய அரசர். மூன்றாம் சார்லஸ்.


. *மாண்டே கார்லோவில் ஒரு சூதாட்ட விடுதி*

முதல் ஜேம்ஸ் பாண்ட் படம் இந்த மாண்டோ கார்லோவில் தான் படமாக்கப்பட்டது. சூதாட்டத்தை அடுத்து இங்கே நடைபெறும் மொனாக்கோ கிராண்ட் ஃப்ரீ கார் பந்தயமும் உலகப்புகழ் பெற்றது. மிகவும் சவாலான பந்தயப் பாதையில் மிக மிகக் குறுகுலான கடினமான சந்துகளையேல்லாம் கடக்க வேண்டும். இதில் கலந்துகொள்ள உலகெங்கிலும் கார் பந்தயக்காரர்கள் குவிகிறார்கள். சூதாட்டமும், கார் பந்தயமும் மொனாக்காவில் பன்னாட்டு நிறுவனங்களை சுண்டி இழுக்கிறது.



*சவால் மிக்க மோனாக்கோ கார் பந்தயம்*

இதன் விளைவாக மொனாக்கோ உலகின் அதிக மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் (GDP $215,163) கொண்டு பொருளாதார உச்சத்தில் உள்ளது.. மொனாக்காவில், (சில நிபந்தனைகளுக்குட்பட்டு) , வருமான வரியே இல்லை

என்பதும் இந்த உச்சத்திற்குக் காரணம். சுற்றுலா, சூதாட்ட, பந்தயக் கவர்ச்சிகளால் உலக செல்வந்தர்களின் விளையாட்டு மைதானமாகியுள்ளது மொனாக்கோ. வங்கியில் பணம் செலுத்துபவர்கள் பற்றிய விவரங்களை பத்திரமாகக் காப்பதால் வங்கித்தொழிலும் இங்கு செழிக்கிறது. சுற்றுச்சூழல் மாசு இல்லாத் தொழில்களே இங்கு நடத்தப்படுகின்றன. உள்ளூர் மக்களில் 30% பேர்கள் கோடீஸ்வரர்கள். மக்கள் நலன் கருதி மொனாக்கோ குடிமக்கள் சூதாட்ட விடுதிகளுக்குள் நுழையவே தடைச் சட்டம் உள்ளது. இனிய தட்ப வெப்பமும், இயற்கையின் எழில் கொஞ்சும் சூழலும், மக்களின் செல்வச்செழிப்பும் இங்கு மக்களைச் சராசரியாக 90 வயது வரை வாழவைக்கின்றன. உலகிலேயே சராசரி ஆயுள் அதிகமாக உள்ள நாடு இதுதான்.

1943ல் இத்தாலிய ராணுவம் மொனாகோவைக் கைப்பற்றியது, பின் ஜெர்மனியைச் சேர்ந்த நாஜிக்களின் பிடிக்குள் அது சென்றது இந்த நிலையில்தான் இளவரசர் மூன்றாம் ரெய்னியர் பட்டத்துக்கு வந்து பிரான்சின் ராணுவ உதவியைக் கோரினார். மொனாக்கோ தம் சுதந்திரத்தைப் பிரான்சுக்கு விட்டுக்கொடுக்கவேண்டும் என்ற அதிர்ச்சிகரமான நிபந்தனையைப் பிரான்ஸ் விதித்தது. மறுத்தது மொனாகோ. மீண்டும் இருதரப்பிலும் பேச்சுவார்த்தை; கடைசியில் மிக மிக விநோதமான ஒரு நிபந்தனைக்கு ஒப்புக் கொண்டது மொனாகோ.


*நடிகையை மணந்து 3வது ரெய்னியர்*

அப்போது மொனாகோவை ஆண்டுவந்த இளவரசர் திருமணமாகாத இளைஞர். ஆண் வாரிசு இல்லாமலேயே அவர் இறந்துவிட்டால் மொனாகோவை பிரான்ஸ் எடுத்துக்கொண்டுவிடும் என்பதே நிபந்தனை. இவளரசருக்குத் திருமணம் செய்து கொள்ளும் எண்ணமே இல்லை என்று தெரிந்தே பிரான்ஸ் இதனை வலியுறுத்தியது. மனதை மாற்றிக்கொண்ட இளவரசர் திருமணம் செய்து கொள்ளத் தீர்மானித்தார். உலகெங்கும் பல ஆண்களின் கனவுநாயகியாக விளங்கிய அமெரிக்க நடிகை கிரேஸ் கெல்லியை மணமுடித்தார். குழந்தையும் பிறந்தது. அது ஆண் வாரிசு! விடுதலை என்று மகிழ்ச்சிக் கூத்தாடினார்கள் மக்கள். இன்றுவரை மொனாகோவில் மன்னர் தான் நாட்டின் தலைவர். 56 ஆண்டுகள் இவர்

மொனாக்கோவை ஆண்டார். ஏழு நூற்றாண்டுகளாக மொனாகோவை ஆட்சி செய்வது கிரிமால்டி குடும்பத்தைச் சேர்ந்த இளவரசர்கள்தாம். 1297ல் ஃபிராங்காயில் கிரிமால்டி என்பவர் துறவி வேடத்தில் ஒரு சின்னப் பையனோடு நுழைந்து மொனாகோ கோட்டையைத் தம் வசமாக்கிக் கொண்டதிலிருந்தே அவர் பரம்பரையே ஆட்சி செலுத்துகிறது.

1983ல் ஐ.நா.சபையின் உறுப்பினரானது மொனாக்கோ. 2002ல் பிரான்ஸுக்கும் மொனாக்கோவுக்கும் இடையே உடன்படிக்கை ஏற்பட்டது: 'இனி கிரிமால்டியின் வம்சம் மொனாக்கோவை ஆளக்கூடாது. மொனாக்கோ அரசமைப்புக்குட்பட்ட குடியரசாக விங்கும், தனி சுதந்திர நாடக விளங்கினாலும், அதற்கான இராணுவப் பாதுகாப்பைப் பிரான்சு ஏற்படுத்தித்தரும்.' என்பதே அது.



*இன்றைய இளவரசர் 2வது ஆல்பர்ட்*

இப்போது இதன் தலைவராக 3ஆம் ரெய்னர் மகன் இளவரசர் இரண்டாம் ஆல்பர்ட் விங்குகிறார்.




*அரச இணையரின் இரட்டைக் குழந்தைகள்*

அண்மையில் அவருக்கு ஆணும், பெண்ணுமாக, இரட்டை குழந்தைகள் பிறந்துள்ளன. ஆனால் ஒப்பந்தப்படி வாரிசுகள் ஆள தடை உள்ளதால் கிரிமால்டி இராஜபரம்பரை இத்தோடு முடிவடையக்கூடும்.



*மொனாக்கோவின் கொடி*

2002இல்.குடியிருப்பு என்ற பொருளுடைய மொனோக்கோஸ் என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து வந்ததே மொனாக்கோ. என்ற நாட்டின் பெயர். மொனாக்கோ கொடியை வரைவது மிக எளிது. மேல்பாதி சிகப்பு, கீழ்பாதி வெள்ளை- அவ்வளவே. இந்தோனேசியாவிற்கும் இதே கொடிதான். ஆனால் அந்தக்கொடி சற்று இதைவிட நீளவாட்டமானது. வலிமைக்கு எடுத்துக்காட்டாக கூறப்படும் ஹர்குலிஸ் ஒரு முறை மொனாகோ வழியாகச் சென்று அங்குள்ள தெய்வங்களையெல்லாம் அனுப்பிவிட்டானாம், எனவே ஹர்குலிசுக்கு மொனாக்கோவில் கோயில் உள்ளது.. ஐரோப்பாவில் இருந்தாலும், ஐரோப்பிய யூனியனில் மொனாகோ உறுப்பினர் அல்ல. எனினும் நாணயம் யூரோதான்! மொனாக்கோவில் பாரம்பரியச் சின்னங்கள் கலந்த யூரோ

நாணயங்களை வெளிவிடுகிறது மொனாக்கோ.
அதிகாரபூர்வமான மதம் கத்தோலிக்க மதம். 280 இசுலாமியர்கள் இங்கு குடியுரிமையின்றித் தங்கியுள்ளனர். மசூதிகள் ஏதுமில்லை. மதமற்றவர்களும், யூதரகளும் சிறு எண்ணிக்கையில் உள்ளனர்.
ஆட்சி மொழி பிரஞ்சு. எனினும் மொனாக்கோ மண்ணின் மொழியான மோனிகாஸ்க், இத்தாலியம்,ஆங்கிலம் ஆகியவையும் பயன்படுத்தப்படுகின்றன. மொனாகோவில் இன்று ஐந்தில் ஒருவர்தான் உள்ளூர்வாசி.

இந்தியாவில் உள்ள சில பணக்காரர்களும் , அரசியல் வாதிகளும் பதுக்கியுள்ள கறுப்புப்பணம் மொனாக்கோவின் வங்கிகளிலும் பத்திரமாக உள்ளதாகக் கூறப்படுகிறது. *(வெற்றி வேந்தன்:நவம்பர் 2015)*